# DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI
## OS No. 24/2019

**2024** ம் வருடம் மார்ச் திங்கள் 08 நாள் பிரதிவாதி தரப்பில் 3 வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டு 10 வது விதியின் படி திரு.முருகேசன், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : சக்திவேல் கிராமம்:

தந்தை / கணவர் பெயர் : தொழில் :

வயது :

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலுள்ள விவரங்கள் வழக்கறிஞருக்கு நான் தான் சொன்னேன். இந்த வழக்கின் வாதி அவருடைய இடம் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி 5 ஏக்கருக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் சர்வே எண், பட்டா எண் தெரியாது.

2. எத்தனை இலக்க சொத்துக்களுக்கு வழக்கு போட்டுள்ளார் என்றால் 5 1/2 ஏக்கருக்கு போட்டுள்ளார். தாவா சொத்தின் நான்குமால் விவரம் எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கின் 4 ம் பிரதிவாதியின் மகன். அவர் இறந்த பின்னர் அவருடைய வாரிசுகளான நாங்கள் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளோம். நான் வேறு சமூகம், வாதி வேறு சமூகம் என்றால் சரிதான்.

3. நான் ஆப்பனூர் கிராமத்தைச் சேர்ந்தவர். எங்கள் ஊரில் தேவர் மற்றும் முஸ்லீம் சமூகம் இருக்கிறார்கள் என்றால் சரிதான். எங்கள் ஊரில் நாடார் சமூகம் மக்கள் யாரும் இல்லை. வாதி எங்கள் ஊரில் தனிக்குடியிருப்பாக இருந்தார்கள் என்றால் சரிதான். ஒரு கலவரத்தின் போது அவர்கள் ஊரைவிட்டு முதுகுளத்தூர் சென்று விட்டார்கள் யாரும் இல்லை.

4. வாதி சமூகத்தினருக்கு தாவா சொத்து போல புனவாசல் குரூப் மற்றும் ஆப்பனூர் குரூப்பில் நிறைய சொத்துக்கள் இருக்கும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தானது புனவாசல் குரூப் ஆப்பனூர் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான்.

**வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**